

# மாநகர் மன்ற குடியிருப்புக் கட்டடங்கள் அனைத்திலும் சோதனை நடத்தப்படும்

கோலாலம்பூர், பிப். 14–

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அனைத்து குடியிருப்புக் கட்டடங்களிலும் விரிவான பரிசோதனை நடத்துவதற்கு ஏதுவாக தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை பணிக்குழுவொன்றை அமைக்கவுள்ளது.

மாநகர் மன்றக் குடியிருப்புக் கட்டடங்களில் தீவிபத்து ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு அப்பணிக்குழு விரிவான புலன்விசாரணை நடத்தும் என்பதோடு அதற்கான ஆலோசனைகளையும் வழங்கும் என்று கோலாலம்பூர் தீயணைப்புத்துறையின் இயக்குநர் முகமது சாலே அப்துல் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று செராஸ், ஸ்ரீசபா குடியிருப்புப் பகுதியில் உள்ள 70ஆவது புளோக்கில் தீப்பற்றியதில் ஐந்து வீடுகள் சேதமுற்றன. அங்கு பார்வையிட நேற்று சென்றிருந்த முகமது சாலே, செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்புமுறையை தரமுயர்த்த வேண்டிய அவசியம் உள்ளது என்பதை இச்சம்பவம் உணர்த்தியுள்ளது என்றும் அவர் சொன்னார்.

மின்கம்பி இணைப்பு முறையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அங்கு தீப்பற்றியிருக்கலாம் என்றும் அவர் கோடிகாட்டினார்.

இதற்கு முன்பாக, பிரதமர்துறை (கூட்டரசு பிரதேசம்) அமைச்சர் டாக்டர் ஜலீஹா முஸ்தாபா, மகளிர், குடும்பம், சமூக மேம்பாட்டுத்துறை துணையமைச்சர் டாக்டர் நோராய்னி அமாட், கோலாலம்பூர் மேயர் கமாருல்ஸமான் மாட் சாலே, பண்டார் துன் ரசாக் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ டாக்டர் வான் அஸிஸா வான் இஸ்மாயில், செராஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டான் கோக் வாய் ஆகியோர் அப்பகுதியைப் பார்வையிட்டதோடு பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்தனர்.